**செய்தி வெளியீடு எண்: 717** **நாள்:24.10.2019**

**தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள தொல்லியல் அகழாய்வுகளுக்கு மத்திய தொல்லியல் ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியுள்ளது**

தமிழ்நாட்டில் இதுவரை தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை 40 வரலாற்று முக்கியத்துவமிக்க இடங்களில் அகழாய்வுப் பணிகள் மேற்கொண்டுள்ளது. அண்மைக் காலங்களில் அழகன்குளம், பட்டறைப்பெரும்புதூர் மற்றும் கீழடி ஆகிய தொல்லியல் மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் விரிவான தொல்லியல் அகழாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. முதன்முறையாக 2014–2015 ஆம் ஆண்டு இராமநாதபுரம் மாவட்டம், அழகன்குளத்தில் அகழாய்வு மேற்கொள்ள ரூ. 55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் தமிழகத்திற்கும் ரோம நாட்டிற்குமான வணிகத் தொடர்புக்கான சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டன. அண்மைக் காலத்தில் தமிழகத்தின் சங்க காலப் பண்பாட்டிற்கு பெருமை சேர்த்துள்ள சிவகங்கை மாவட்டம் கீழடி அகழாய்வுகளுக்கு தமிழக அரசால் 2017–2018 ஆம் ஆண்டிற்கு ரூ. 55 இலட்சமும் 2018–2019 ஆம் ஆண்டிற்கு ரூ. 47 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த அகழாய்வுகளின் முடிவுகளின் மூலம் கீழடி 2600 ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்றும், வைகை ஆற்றங்கரையில் நகர நாகரிகம் இருந்ததற்கான சான்றுகள் அறிவியல் முறைப்படி நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் விரிவான தொல்லியல் அகழாய்வுகள் மேற்கொள்ள திட்டமிட்டது. இதன் அடிப்படையில், தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறையால் 2019–2020 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளை, ஈரோடு மாவட்டத்திலுள்ள கொடுமணல், சிவகங்கை மாவட்டத்திலுள்ள கீழடி ஆகிய தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் தொல்லியல் அகழாய்வு மேற்கொள்ள மத்திய தொல்லியல் ஆலோசனைக் குழுவிடம் அனுமதி கோரப்பட்டது. மேற்படி இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ள மத்திய தொல்லியல் ஆலோசனைக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு அரசு, ஆண்டுதோறும் பல்வேறு இடங்களில் தொல்லியல் கள ஆய்வு மற்றும் அகழாய்வுகள் மேற்கொள்ளுவதற்கு ரூ. 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாண்டு ஆதிச்சநல்லூர், சிவகளை, கொடுமணல் மற்றும் கீழடி ஆகிய தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் ஜனவரி மாதம் இறுதியில் முறையான தொல்லியல் கள ஆய்வுகள் மற்றும் அகழாய்வுகள் துவங்கப்படவுள்ளன.

**ஆதிச்சநல்லூர், தூத்துக்குடி மாவட்டம் – தொல்லியல் அகழாய்வு**

ஜெர்மன் நாட்டைச் சார்ந்த டாக்டர் ஜாகோர் என்பவர் 1876 ஆம் ஆண்டு முதன் முதலில் ஆதிச்சநல்லூரில் பறம்பு பகுதியில் அகழாய்வு மேற்கொண்டார். அந்த அகழாய்வில் பல தாழிகளும் எலும்புகளும், பொற்பட்டங்களும், வெங்கல பாத்திரங்களும், இரும்பு பொருட்களும், மட்பாண்டங்களும் கண்டெடுத்தார். சென்னை அரசு அருங்காட்சியகத்தின் துணை கண்காணிப்பாளராக 1899 முதல் 1900 வரை பணியாற்றிய அலெக்சாண்டர் ரீ அவர்கள் 1902–03 (ம) 1903–04 ஆம் ஆண்டுகளில் இப்பகுதியில் அகழாய்வு மேற்கொண்டார். இவை தற்போது சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஆதிச்சநல்லூர் தொல்பொருட்களுக்கு என்று தனிப்பிரிவு ஏற்படுத்தி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. 2003–2004, 2004–2005 ஆகிய ஆண்டுகளில் இந்திய தொல்லியல் துறை மூலம் தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழாய்வில் அரிய தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இரும்பு கால தொடக்கத்தைச் சார்ந்த இவ்விடத்தில் மேலும் தொடர் அகழாய்வு செய்வது அவசியமாகும்.

**கொடுமணல், ஈரோடு மாவட்டம் – தொல்லியல் அகழாய்வு**

ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலைக்கு அருகில் உள்ள ‘‘கொடுமணல்‘‘ என்ற ஊரில் இந்திய தொல்லியல் துறை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, தமிழ்பல்கலைக்கழகம் ஆகியவை 1985–86,1989–90, 1992, 1992–93, 1996–97, ஆறு கட்டங்களில் விரிவான அகழாய்வு செய்தனர். இவ்வூரின் கிழக்குப் பகுதியில் காணப்படும் மண்மேட்டில் பண்டைய வாழ்விடப்பகுதி மற்றும் ஈமக்காடு ஆகிய இரண்டும் உள்ளன. நத்தக்காடு, செலவானக்காடு, சம்பக்காடு ஆகிய பகுதிகள் வாழ்விடப்பகுதிகளாக அமைந்துள்ளன.

இவ்வாழ்விடப்பகுதியின் வடக்கிலும், கிழக்கிலும் பெருங்கற்காலச் சின்னங்கள் உள்ளன. இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளில் பெருங்கற்கால மற்றும் வரலாற்றுத் தொடக்ககால தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டன. இப்பகுதியில் அரிய கல்மணிகள் செய்தல், இரும்பு உருக்கு தொழில், உழவுத் தொழில் போன்ற தொழில் கூடங்கள் இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளன, கொடுமணலில் தமிழ் பிராமி எழுத்துப் பொறிப்புடன் கூடிய பானை ஓடுகள் அதிக எண்ணிக்கையில் கிடைத்துள்ளன, இப்பானை ஓடுகள் பெரும்பாலும் கருப்பு சிவப்பு நிறம் கொண்டவையாக உள்ளன. பொ.ஆ.மு 300 முதல் பொ.ஆ 300 வரையிலான காலகட்டத்தை சார்ந்த பண்பாடு இப்பகுதியில் நிலவியதை இங்கு கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் சான்று பகர்கின்றன.

**சிவகளை, தூத்துக்குடி மாவட்டம் – தொல்லியல் அகழாய்வு**

தூத்துக்குடி மாவட்டம். ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில் அமைந்துள்ள சிவகளை எனும் ஊரில் 1000 ஏக்கருக்கு மேற்பட்ட பரம்புப் பகுதியில் உள்ள தொல்லியல் மேட்டில் இரும்புக் காலத்தைச் சார்ந்த எண்ணற்ற தொல்பொருட்கள் மேற்பரப்பில் கிடைக்கின்றன. ஆதிச்சநல்லூர் போன்று இப்பகுதியிலும் இரும்புக் காலத்தைச் சார்ந்த பண்பாட்டினை வெளிக்கொணர அகழாய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

**கீழடி, சிவகங்கை மாவட்டம் – தொல்லியல் அகழாய்வு**

இந்திய தொல்லியல் துறை 2014–2015, 2015–2016, 2016–2017 ஆகிய மூன்று ஆண்டுகளில் அகழாய்வு மேற்கொண்டது. இந்த அகழாய்வுகளில் 7818 தொல்பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்டது. மேலும், செங்கல் கட்டுமானங்களும் வெளிக்கொணரப்பட்டன. இக்கட்டுமானங்கள் நெசவுத் தொழிலுக்கான சாயத் தொழிற்சாலையின் கட்டுமான அமைப்பு எனத் தெரிவிக்கப்பட்டது. கீழடியில் சங்ககால (வரலாற்றுத் தொடக்ககாலம்) மக்கள் வாழ்ந்ததற்கானச் சான்றுகள் வெளிப்படுத்தப்பட்டன.

2018–2019–ஆம் ஆண்டில் நான்காம் கட்ட தொல்லியல் அகழாய்வினை தமிழ்நாடு அரசு, தொல்லியல் துறை மேற்கொண்டது. இந்த அகழாய்வில் 5820 தொல்பொருட்களும் பழந்தமிழரின் கட்டுமானப் பகுதியும் வெளிப்படுத்தப்பட்டன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை ஐந்தாம் கட்டத்தில் அகழாய்வு செய்வதற்குரிய இடத்தினை தேர்வு செய்வதற்கு பல்வேறு அறிவியல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி களஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த ஆய்வுகளின் அடிப்படையில் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, அகழாய்வு நெறிமுறைகளின்படி அகழாய்வு செய்யப்பட்டன. நான்காம் கட்ட அகழாய்வு குறித்தான முதனிலை அறிக்கை அண்மையில் நூலாக வெளியிடப்பட்டு பொதுமக்கள் மற்றும் ஆய்வாளர்களிடையே பெரும்வரவேற்பினைப் பெற்றுள்ளது.

இந்த ஐந்தாம் கட்ட அகழாய்வில் பல்வேறு வடிவிலான செங்கல் கட்டுமானங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இந்திய தொல்லியல் துறை இரண்டாம் கட்ட அகழாய்வில் வெளிப்படுத்திய கட்டுமானத்தின் தொடர்ச்சியை வெளிக்கொணர்ந்துள்ளது. இக்கட்டுமானங்கள் செங்கல்லிலான திறந்த நிலையிலான வாய்க்கால், மூடிய நிலையிலுள்ள வடிகால், சுருள் வடிவிலான சுடுமண் குழாய் போன்ற வடிகால் அமைப்புகள் கண்டறியப்பட்டன.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**